(ஆ) பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைத் துணைத் தலைவர் பதவி தற்போது வெற்றிடமாக உள்ளது. இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேர்தல், 29–10–2012, திங்கட்கிழமை அன்று நடைபெறும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 8 (1)–ன்படி, பேரவைத் துணைத் தலைவர் தேர்தலுக்கான வேட்புத் தாள்கள் 26–10–2012 அன்று நண்பகல் 12–00 மணி வரையில் சட்டமன்றப் பேரவைச் செயலாளரால் பெற்றுக்கொள்ளப்படும்.*

4. அரசினர் தீர்மானம்

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“பேரவை விதி 25 (1)–ன்கீழ் பேரவை 29–10–2012 அன்று மீண்டும் கூட்டப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை இப்போது ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் 29–10–2012 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11–24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.